NP – 085

4

**II Semester B.A./B.V.A./D.D.M. Examination, August/September 2023**
**(NEP Scheme)**
**TAMIL LANGUAGE (Paper – II) (Part – I)**

Time : 2½ Hours　　　　Max. Marks : 60

SECTION – A

I. அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. **(5×1=5)**

1) வேர்ப்பலா – என்னும் நூலின் ஆசிரியர்
   1) மு. வரதராசன்　　2) கண்ணதாசன்
   3) கி. இராசா　　4) வைரமுத்து

2) அரசியல் பிழைத்தோர்க்கு ________ கூற்றாகும்.
   1) அன்பு　　2) அறம்
   3) கருணை　　4) கோபம்

St Claret College
LIBRARY
Bangalore-560013

3) சேக்கிழாரின் இயற்பெயர்
   1) அருண்மொழிவர்மன்　　2) வந்தியத்தேவன்
   3) சாண்டில்யன்　　4) அருண் மொழித்தேவர்

4) மாணிக்கவாசகர் இயற்றிய நூல்
   1) திருவாசகம்　　2) பெரியபுராணம்
   3) திருவிளையாடல் புராணம்　　4) கந்தபுராணம்

5) ‘விசேஷம்’ – என்ற சொல்
   1) இயற்சொல்　　2) திரிசொல்
   3) திசைச்சொல்　　4) வடசொல்

II. எவையேனும் ஐந்திற்கு இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக. **(5×3=15)**

1) கொடுங்கோல் வேந்தன் குடிகள் போல
   படும்கதிர் அமையம் பார்த்திருந் தோர்க்கு

2) செப்பு அரும்சீர் அப்பூதி அடிகளார் செய்து அமைத்தார்
   தப்பு இன்றி எங்கும் உளசாலை குளம்கா என்றார்

P.T.O.

3) கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்
என்னப்பன் என்ஒப்பில் என்னையும்ஆட் கொண்டருளி

4) கண்மணி அனையாற்குக் காட்டுக என்றே
மண்உடை முடங்கல் மாதவி ஈத்ததும்

5) கோலாலம் ஆகிக் குரைகடல்வாய் அன்றெழுந்த
ஆலாலம் உண்டான் அவன்சதுர்தான் என்னேடி

6) வணிகர் மற்றும் மருத நிலக்கிழார்களின் எழுச்சியாலும்,
மறைநெறி தமிழகத்தில் வேரூன்றத் தொடங்கியமையாலும்
வீரநிலைக் காலத்தில் பாணர்கள் சிறப்புக் குன்றியிருந்தனர்

7) 'ஒருவன் மனத்தில் மாசு இல்லாதவனாக இருப்பானேயானால்
அதுவே அறம்' என்று அறத்தின் இயல்பினை வள்ளுவர்
உணர்த்தும் திறன் காணலாம்

8) இந்தச் சந்திப்பு பாரதியின் வாழ்வில் ஒரு திருப்பு
முனையாகத் திகழ்ந்தது

## SECTION – B

III. எவையேனும் ஐந்து வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக. **(5×4=20)**

1) பெயர்ச் சொல் என்றால் என்ன ? அறுவகை பெயர்ச் சொற்களைச் சான்றுடன் குறிப்பிடுக.

2) இயற்சொல், திரிசொல் – இவற்றைச் சான்றுடன் விளக்குக.

3) வேற்றுமைத் தொகையைச் சான்றுடன் புலப்படுத்துக.

4) வினையெச்சம் என்றால் என்ன ? அதன் வகைகளை எடுத்துக் காட்டுடன் கூறுக.

5) மதுரைக்குச் செல்லும் வழியின் இயல்பினை பாணர்கள் எவ்வாறு எடுத்துரைத்தனர் ?

6) அப்பூதியடிகளின் மூத்த மகனுக்கு நேர்ந்த அவல நிலையைப் புலப்படுத்துக.

7) பண்டைக்கால தமிழர்கள் வறுமையிலும் விருந்தோம்பினர் என்பதை நிறுவுக.

8) புதுமைப் பித்தன், தன் கதைகளில் 'தடைகளை உடைத்தவர்' என்பதைப் புலப்படுத்துக.

## SECTION – C

IV. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக. **(4×5=20)**

1) கௌசிகன் கோவலனை எவ்வாறு கண்டறிந்தான் ?

2) திருநாவுக்கரசரின் பெருமைகளாக அப்பூதியடிகள் கூறுவனவற்றை எழுதுக.

3) மாணிக்கவாசகர், சிவபெருமானை திருப்பள்ளியில் இருந்து எவ்வாறு எழுப்புகின்றார் ?

4) கண்ணகி காப்பியத்திற்கும் இனானா கதைக்கும் உள்ள உறவுநிலையை விளக்குக.

5) பாவேந்தரின் பாடல்களில் அமைந்துள்ள பொதுவுடைமை கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

6) குலசேகர ஆழ்வாரின் பக்தி அனுபவத்தைக் காட்சிப்படுத்துக.